தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

# ஆண்டறிக்கை

# 2016

NIOSH

National Institute of Occupational Safety and Health • Sri Lanka

## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**கௌரவ டபிள்யூ.டீ.ஜே.செனவிரத்ன**

அமைச்சர் - தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

**கௌரவ ரவீந்திர சமரவீர**

பிரதி அமைச்சர் - தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

**திரு. எஸ்.எம்.ஜி.ஜயரத்ன**

செயலாளர், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

தவிசாளர் - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**கலாநிதி.என்.சி.அமரசிங்க**

பணிப்பாளர் நாயகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**கணக்காய்வுக் குழு**

- **டாக்டர்.என்.சி.அமரசிங்க** - பணிப்பாளர் நாயகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்
- **எம்.ஹெட்டியாராய்ச்சி** – தலைவர், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மற்றும் பணிப்பாளர் நிதி அமைச்சு
- **டபிள்யூ.டீ.பி.ஜே.வெலிவத்த** – அவதானிப்பாளர், கணக்காய்வு அத்தியேட்சகர், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்
- **எம்.ஆர்.ஜி.ஏ.பி.முதுகொடே** – உள்ளகக் கணக்காய்வாளர், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு
- **பி.எம்.கே.பெரேரா** – உதவிப் பணிப்பாளர், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**வங்கி**

மக்கள் வங்கி – நாரஹேன்பிட்டி

**பொருளடக்கம்** **பக்கம்**


| | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 01 | அறிமுகம் | 03 |
| 02 | தொலைநோக்கு மற்றும் செயற்பணி | 05 |
| 03 | அமைச்சரின், செயலாளரின் மற்றும் பணிப்பாளர் அதிபதியின் செய்திகள் | 06 |
| 04 | நிறுவகத்தின் கட்டமைப்பு | 13 |
| 05 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் குறிக்கோள்கள் | 14 |
| 06 | 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தே.தொ.பா.சு.நிறுவகத்தினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் | 16 |
| 07 | **பயிற்சிகள்** | |
| | • மேற்பார்வையாளர்கள் மற்றும் தர மதிப்பீட்டு உதவியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பயிற்சி | 17 |
| | • நிருமாணத்துறை மேற்பார்வையாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி | 18 |
| | • சூழல்சார் பாதுகாப்பு மற்றும் கழிவினைக் கையாளுதல் | |
| | • நிருமாண பாதுகாப்பு பற்றிய பயிற்சி | |
| | • மனவழுத்தத்தைக் கையாளுதல் | 19 |
| | • மின்சார பாதுகாப்பு பற்றிய பயிற்சி | |
| | • கொதிகலன் இயக்குநர்களுக்கான பயிற்சி | |
| | | |
| | **கற்கைநெறி** | |
| | • தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் | 20 |
| | • தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா | 22 |
| | | |
| | **மாநாடு** | |
| | • தேசிய கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் | 23 |
| | • தேசிய பாதுகாப்பு வாரம் | |
| | • 06 ஆவது தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகங்களின் கூட்டம் | 24 |
| | • தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு 2016 | 27 |
| | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவம் பற்றி தொழிற்றுறைக்கு ஆலோசனை சேவைகள் | 31 |
| | உபகரணத்தைச் சரியாக பயன்படுத்துவது பற்றித் தேவைப்படுத்தப்பட்ட சேவைகளின் ஏற்பாடு | |
| | தொழிலாற்றுவதற்கான உடற்றகுதி - இலவச மருத்தவ பரிசோதனை முகாம் | 32 |
| | ஹப்புத்தளை தோட்டத் தொழிலாளர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறை | |
| | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறையில் கருத்தாய்வும் ஆராய்ச்சியும் | 34 |
| | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வேலைக் கிரமம் | |
| | நிறுவனத்தின் திடநிலையும் அதன் வளர்ச்சியும் | 37 |
| | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கற்கைகள் நூலகம் | 39 |
| | நிதிப் பகுப்பாய்வு | 40 |
| | நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் | 43 |
| | கணக்காய்வாளர் அறிக்கை | 45 |

# தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**அறிமுகம்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் ஒன்றிணைந்த அங்கமாக விளங்கியுள்ளதுடன், வேலைத்தலத்தின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை முன்னேற்றுவதற்கு அர்ப்பணித்துள்ள கொள்கையொன்றை ஆக்குகின்ற நிறுவன மொன்றாகப் பணியாற்றுகின்றது. இந்நிறுவகமானது, தகவல் வழங்குதல், பயிற்சியளித்தல், கல்வி ஆராய்ச்சி, ஆய்வுகள், தீர்வுகள் மற்றும் வேலையாற்றுகின்ற சூழல்களில் வளமான பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்துகின்ற முகாமைத்துவ முறைமைகள் என்பவற்றினூடாக இலங்கையில் தொழிலாளர் வர்க்கத்தின் மொத்த பௌதீக, உள மற்றும் சமூக நலனை மேம்படுத்துவதற்கான தேவையை அடிப்படையாகக்கொண்டு நிறுவப்பட்டுள்ளது.

இலங்கையின் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் 2009 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட நியதிச்சட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ள தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, இடர்களை மதிப்பிடுவதில் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு பணியாளர்கள் மற்றும் தொழில்தருநர்களுக்கு வலுவளிப்பதுடன், அவர்களது பணியாளர்களதும், அவர்களது தாபனங் களின் ஏனைய அக்கறைதாரர்களதும் சுகாதாரப் பாதுகாப்பையும், சேமநலனையும் செம்மைப்படுத்து வதில் உலக தரத்திலான தீர்வுகளையும் நடைமுறைப்படுத்துகின்றது.

எந்தவொரு நாட்டினதும் நிலையான பொருளாதார அபிவிருத்தியைக் கட்டியெழுப்புவது ஆரோக்கியமான தொழிலணியொன்றேயாகும் என்பதுடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவக மானது, இலங்கை முழுவதும் பாதுகாப்பான ஆசாரமொன்றை உருவாக்கி, பாதுகாப்பாக, ஆரோக்கிய மாக வேலையாற்றும் சூழலிலிருந்து பணியாற்றுவதற்கு தனிப்பட்டவர்களது அடிப்படை மனித உரிமைக ளை மேம்படுத்துகின்றது.

இன்றைய வேலை வாழ்க்கையின் அழுத்தம் மற்றும் pace நீண்ட நேர வேலை மணித்தியாலம், குறைந்தளவு சுகாதார விழிப்புணர்வு மற்றும் ஒட்டுமொத்த தனிநபர்களது உள சமூக அந்தஸ்து காரணமாக குறைவடைந்து செல்கின்ற ‘வேலை வாழ்க்கையின் சமநிலை’ போன்ற அத்தகைய பல பங்களிப்புச் செய்கின்ற காரணிகளுடன் தொடர்புபட்டுள்ளது.

நிறுவகமானது, உரிய சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தலைப்புகள் பற்றி தாபனங்கள் மற்றும் அக்கறை தாரர்களுக்கிடையே நீடித்த கலந்துரையாடலை ஊக்குவித்து, ஆதரவளிக்கின்றது. தொழில்சார் ஊறுகள் காரணமான பொருளாதார செலவீட்டினை கட்டுப்படுத்திக் குறைத்தல், வேலைத்தலங்களில் உற்பத்தித் திறனைச் செம்மைப்படுத்துதல், ஆரோக்கியமான, ஊக்குவிக்கப்பட்ட தொழில் அணியொன்றை உருவாக்குதல் போன்றவற்றிற்காக தனிப்பட்டவரின் பொறுப்பினை ஊக்குவிக்கின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சவால்களைத் தெரிவிக்கின்ற தாபனங்களுக்கு உதவுகின்ற தகவல்கள், கருவிகள் மற்றும் வளங்களுடன்கூடிய ஆற்றல்களை வழங்கு தொழிற்றுறை நிபுணர்களினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அதிகளவில் கவனஞ்செலுத்தி வழங்குகின்றது. இந்த முயற்சிகள், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொடர்புகளையும், வலையமைப்பையும் நிறுவு வதற்கும், இந்த விடயம் தொடர்பில் மேலும் ஆய்வுகளையும், ஆராய்ச்சிகளையும் மேற்கொள்வதற்கும் ஏனைய தாபனங்களுடன் இணைவதன் மூலம் நிறைவுசெய்கின்றது.

இந்நிறுவகமானது, மருத்துவ பரிசோதனைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர் மதிப்பீட்டாய்வுடன இணங்கி சூழல் கண்காணிப்பும் பயிற்சியும் மற்றும் பாரிய பிராந்திய அளவீடு, மன்றங்கள், மாநாடுகள் மற்றும் வலையமைப்பு நிகழ்வுகள் அத்துடன் ஆரோக்கியமானதும் அதிக பொருத்தமானதுமான வேலை செய்முறைகள் போன்றவற்றிற்கு உதவுகின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, பாகுபாடற்ற உலக தரத்திலான தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவையை எப்போதும் வழங்குகின்றதொரு நிறுவகம் என்பதுடன், தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களைக் குறைக்கும் நோக்கத்துடன் பாதுகாப்பான, சுகாதாரமான வேலைச் சூழலை உருவாக்குவதுடன்,சுய நிதியிடல் நிறுவகமொன்றாக நிறுவி நிலையாக இருப்பதற்கு கவனஞ்செலுத்துகின்றது.

மிகவும் வெற்றிகரமான முறையில் மேலுள்ள செயற்பாடுகளை ஆற்றுவதன் மூலம் வாடிக்கையாளர் களின் உச்ச திருப்திக்காக அவர்களுக்கு ஆக்கத்திறன்சார் சேவையை வழங்க முடிந்துள்ளதென்பதை தெரிவிப்பதில் நாம் மிகவும் மகிழ்வடைகின்றோம். 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுகின்ற அதி உயர் இலக்கு குறுகிய காலப்பகுதியில் அடையப்பட்டுள்ளமை பாரிய வெற்றி யென்பதையிட்டு நாம் பெருமைப்பட முடியும். தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் சேவைகளை நிலையாக பல நிறுவனங்கள் பெற்றுள்ளன என்ற இந்த உண்மையை தொடர் ஆய்வு நிரூபிக்கின்றது.

அண்மைய கடந்த காலங்களில் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து அந்த நிறுவனங் களிலிருக்கின்ற பணியாளர்களின் தற்காப்பு, பாதுகாப்பு மற்றும் சுகாதார நியதிகளில் விழிப்புணர்வினை உருவாக்குவதற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை நாம் பெறுப்பேற்றுள்ளோம்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, அனைத்து சுதந்திர வர்த்தக வலைய தொழிற்றுறைகளுக்கிடையிலும் அதேபோன்று உற்பத்தித் துறை, புடைவை மற்றும் ஆடை உற்பத்தித் துறை, விவசாய துறை போன்ற அத்தகைய அனைத்து தொழிற்றுறைகளிலும் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்துவதில் அவர்களது தேவைகளின் அடிப்படையில் மிகவும் வெற்றிகரமான சேவையை வழங்கி தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் முத்திரையைப் பதிக்க முடிந்திருந்தது.

## தொலைநோக்கு ......................

**"அனைவருக்கும் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பலை வழங்குதல்"**

## செயற்பணி ........................

**" வேலைத்தலத்தின் பாதுகாப்பினையும் சுகாதாரத்தையும் உறுதிப்படுத்தும் மற்றும் உற்பத்தித்திறனை செம்மைப்படுத்தும் பொருட்டு அனைத்து வகையான தொழில்வாய்ப்புத் தடைகளையும் தடுப்பதற்குரிய கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றினூடாக முத்தரப்பு அக்கறைதாரர்களையும் வலுப்படுத்துதல்"**



## கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சரின் செய்தி

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28 ஆம் திகதி தாபிக்கப்பட்ட நியதிச்சட்டக் கூட்டுத்தாபன அமைப்பொன்றாகும். ஆனால் நியதிச்சட்ட தத்துவங்கள், இலங்கை தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் வழங்கப் பட்டிருந்தன. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, விழிப்புணர்வினை அதிகரிப்பது மற்றும் உரிய சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றச் செய்வதனூடாக அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான வேலைச் சூழலை சீர்ப்படுத்தி, பேணி, நிரந்தரமானதாக்கு வதற்கு தன்னை அர்ப்பணிக்கின்றது. விழிப்புணர்வு பற்றிய பயிற்சியினை உருவாக்குதல், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய ஆராய்ச்சி, நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவல்கள், ஆலோசனை மற்றும் உசாவலர் சேவைகளைப் பரப்புதல் எமது பணிப்பாணையாகும். நாம் பணியாளர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஏனைய அனைத்து வேலையாளர்களுக்கும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் பற்றி கற்பிக்கின்றோம்.

கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், ஆரோக்கியத்தையும், இலங்கையில் ஆரோக்கியமான தொழில் அணியொன்றையும் உருவாக்குவதிலான அர்ப்பணிப்பினைக் குறித்துக் காட்டுகின்றன. தொழில்சார் பாதுகாப்பு சூழலைக் கட்டியெழுப்புவதில் மேற்கொள்ளப்பட்டுள்ள அர்ப்பணிப்பினை நான் பாராட்டுகின்றேன்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தை முன்னெடுப்பதில் ஓய்வில்லாது பங்களிப்பு நல்கியிருந்த தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி உள்ளடங்கலாக அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டபிள்யு.டீ.ஜே.செனவிரத்ன**



**தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சுச் செயலாளர் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் தலைவர் அவர்களின் செய்தி**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தனது அபிவிருத்தியில் முன்னேற்றத்தைக் காட்டி, தொழிற்றுறைக்கு தனது சேவைகளை நல்கியுள்ள இந்நிறுவகத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கைக்கு இச்செய்தியை வழங்குவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையில் பாதுகாப்பான கலாசாரமொன்றை விருத்தி செய்வதனை முன்னேடுப்பதில் பணியாற்றிய அனைத்துப் பணியாளர்களின் அர்ப்பணிப்பு பற்றிய தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் ஆண்டறிக்கையானது என்னை மிகவும் கவர்கின்றது. சர்வதேச தொழில் தாபனத்தினால் வெளியிடப்பட்ட உலக மதிப்பீட்டின்படி, வருடாந்தம் உலகளாவியரீதியில் 2.3 மில்லியன் இறப்புகள் தொழில் புரிகையில் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அதிகளவான இறப்பு வீதம் ஏனையவை தொழில்சார் ஊறுகளின் காரணத்தினால் இருக்கையில், சுமார் 2 மில்லியன் இறப்புகள் தொழிலுடன் தொடர்புபட்ட நோய்களால் ஏற்பட்டுள்ளன. ஊறு மற்றும் நோய்களுடன் தொடர்புபட்ட வேலை பொருளாதாரச் செலவு நாட்டில் உள்நாட்டுப் பொருளாதார உற்பத்தியில் 1.8 – 6% என்பதற்கிடையில் மாறுபட்டு சராசரியாக 4% என மதிப்பிடப்படுகின்றது.

விபத்தொன்று அல்லது ஊறு ஏற்படுவதனை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகளுக்கு வேலை யாளர்களின் சொந்தப் பண்புகள், குடும்ப நிலைமை, வீட்டுச் சூழ்நிலை, வேலைக்கு வரும் போது இடம்பெறும் நிகழ்வுகள், உபகரணத்தின் வகைகள், பயன்படுத்தியுள்ள சாதனங்கள் போன்று பல காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. உதாரணமாக, களைப்பு, மன அழுத்தம் மற்றும் சத்தம், சுத்தமின்மை, வெளிச்சம் போதாமை, பாதுகாப்பான உபகரணம் இன்மை, உபகரணங்களைப் பயன்படுத்துகைளில் பயிற்சி போதாமை, கவனமின்மை, நேரம் போன்ற அத்தகைய வேலை நிலைமைகள் சரியின்மை அத்துடன் பிற வேறு காரணிகளும் விபத்தொன்றில் பங்கு வகிக்கின்றன. இதன்படி, நாம் அனைவரும் இந்த நிலைமைகளை மிகவும் தீவிரமாக நோக்க வேண்டும் என்பதுடன் தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களைத் தடுப்பதில் ஈடுபடுதலும் வேண்டும்.

**தொழில்சார் ஊறுகளைத் தடுப்பது என்பது தெழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அரசு ஆகிய முத்தரப்பினதும் இணைந்த பொறுப்பாகும்.**

இந்த பாரிய நிகழ்வினை ஒழுங்குபடுத்துவதற்கான தலைமைத்துவத்தை அரச தாபனமாக எனது அமைச்சாகிய தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் எடுத்துள்ளது.

தொழில்சார் ஊறுகளைத் தடுப்பதில் புதிய உபாயங்களை செம்மைப்படுத்தி விருத்தி செய்வதற்கு பாரியளவு பங்களிப்புச் செய்துள்ள பதவியினருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், வார இறுதி நாட்களில் மாணவர்கள், ஆசிரியர்களை ஒருங்கிணைத்து கடுமையாக உழைத்திருந்த தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் ஏனைய பதவியினருக்கும் எனது நன்றிகள்.

**திரு.எஸ்.எம்.கோடாபய ஜயரத்ன**

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகப் பணிப்பளர் அதிபதியின் செய்தி**



தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28 ஆம் திகதி தாபிக்கப்பட்ட நியதிச்சட்டக் கூட்டுத்தாபன அமைப்பொன்றாகும். ஆனால் நியதிச்சட்ட தத்துவங்கள், இலங்கை தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் வழங்கப் பட்டிருந்தன. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, விழிப்புணர்வினை அதிகரிப்பது மற்றும் உரிய சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றச் செய்வதனூடாக அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான வேலைச் சூழலை சீர்ப்படுத்தி, பேணி, நிரந்தரமானதாக்கு வதற்கு தன்னை அர்ப்பணிக்கின்றது. விழிப்புணர்வு பற்றிய பயிற்சியினை உருவாக்குதல், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய ஆராய்ச்சி, நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவல்கள், ஆலோசனை மற்றும் உசாவலர் சேவைகளைப் பரப்புதல் எமது பணிப்பாணையாகும். நாம் பணியாளர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஏனைய அனைத்து வேலையாளர்களுக்கும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் பற்றி கற்பிக்கின்றோம்.

இந்நிறுவகத்தின் இலக்கு, சுய நிதியிடல் அமைப்பொன்றாக இருக்கையில் தொழிற்றுறைக்கு உலக தரத்திலான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவையொன்றினை வழங்குவதாகும். தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார தாபனம் எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் தொழில்சார் பாதகாப்பு மற்றும் சுகாதார தகவலை வழங்குவதில் முன்னணியில் இருக்கின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழில்நுணுக்கம் பற்றிய பயிற்சி களை அளிப்பதன் மூலமும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலமும் தொழில்சார் நோய்கள், காயங்களைக் குறைத்தல், வர்த்தக தொழிற்பாட்டாளர்களின் நியதிகளின்படி மேல் மட்ட தொழில்சார் சுகாதார நலன் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை ஏற்பாடு, தொழில்சார் நோய்கள் மற்றும் தொழில்சார் விபத்துகளைத் தடுத்தல், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தின் பெறுபேறுகளின் தாக்கம், மாணவர்களுக்கு தேவையான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய ஏற்பாடுகள், தொழிற்றுறைக்கு சுற்றாடல்சார் கண்காணிப்பு சேவைகளை வழங்குதல் போன்றவற்றிற்கு பொறுப்பு வாய்ந்தது என்று பணிக்கப்படுகின்றது.

எமது நிறுவகத்தினால் அளிக்கப்படுகின்ற பயிற்சிகள், வேலைத் தலங்களில் ஏனையவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் தொழில் புரிகையில் வேலையாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும். தமது வேலைத்தலங்களில் இருக்கின்ற குறிப்பிட்ட தீங்குகளை இனங்காண்பதற்கு தனிப்பட்டவர்களையும் இயலச்செய்கின்றது.

நாம், எமது சேவைகளை வழங்குவதற்கு சிறந்த விஞ்ஞானம்சார் செய்முறைகளை, சிறந்த விஞ்ஞான அறிவினையும் வளங்களையும் மட்டுமே பயன்படுத்துகின்றோம். எமது சேவைகளை வழங்குவதற்கு அனுபவம்வாய்ந்த சிறந்த தகைமையுள்ள நிபுணர்களைப் பணிக்கமர்த்துவதன் மூலம் எமது சேவைகளின் சிறந்த தரத்தை நாம் பேணுகின்றோம். நாம், இலங்கையரின் எதிர்கால தொழிற் றுறையினை நோக்கி சிறந்த தரமான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளை நாம் வழங்குகின்றோம்.

நாம்தான், உள் நாட்டு தொழிற்றுறை, தொழில்தருநர்கள், பணியாளர்கள், சர்வதேச தொழில் தாபனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உலக எண்ணக்கருத்துக்களுக்கமைவான தொழில்சார் சமூகத்துடன் பங்குடமையை ஏற்படுத்துவதில் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரேயொரு அரசாங்க நிறுவகமாவோம். மேலும், நாம் தொழில்தருநாகள், பணியாளர்கள் மற்றும் அனைத்துப் பங்குதாரர்களுடனும் பணிபுரிவதுடன், **அனைத்து முத்தரப்பு ஆக்கக் கூறுகளுடன்** தொடர்பினைப் பேணுவதற்காக எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

**டாக்டர்.என்.சி.என்.அமரதுங்க**

### தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் நிருவாகக் கட்டமைப்பு

2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின்படி, மூன்றாம் தரப்புச் சபையை உள்ளடக்கிய பொதுச் சபைக் குழுவே தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் தீர்மானம் மேற்கொள்ளும் குழுவாகும். இப்பொதுச் சபைக் குழுவின் கட்டமைப்பானது 14 அமைச்சுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ளதோடு தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளரைத் தலைவராகவும் கொண்டுள்ளது.

**ஆளும் சபை உறுப்பினர்களின் வெட்டுமுகம்**



**தலைவர்**
திரு. கோத்தபாய ஜயரத்ன
செயலாளர்
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு

**சபை உறுப்பினர்கள்**



திருமதி. சாமினி அமரதுங்க
ஆணையாளர் அதிபதி
தொழில் திணைக்களம்



**டாக்டர். சம்பிக அமரசிங்க**
பணிப்பாளர் அதிபதி
தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம

------------------------------

**திரு. ரோஹிதா பெர்னாண்டோ**
பிரதம தொழிற்சாலைகள் பொறியியலாளர்
தொழில் திணைக்களம்



**பேராசிரியர் அஜித் டீ அல்விஸ்**
இரசாயனச் செயன்முறைப் பொறியியற் பேராசிரியர்
மொரட்டுவப் பல்கலைக்கழகம்



**மருத்துவர் இனோகா சுரவீர**
சமூக மருத்துவ ஆலோசகர்
சுகாதார அமைச்சு



**டாக்டர் டபிள்யூ.பி.விஜேரத்ன**
**உணவு மற்றும் விவசாய அமைச்சு**



**திரு.பீ.எம்.கே.ஹெட்டியாராய்ச்சி**
**பணிப்பாளர்**
**நிதி அமைச்சு**

**திரு.எச்.என்.பீ.ஹேட்டிகந்தக**

**திரு.டபிள்யு.டீ.பீ.பி.வன்னியாராய்ச்சி**

**திரு.டபிள்யு.டீ.எம்.ஜி.பி.திஸ்ஸநாயக**


**திரு.ஏ.டீ.வீ.குமார வீரசிங்க**

**திரு.எச்.ஐ.ரூபசிங்க**

**திரு.டீ.டீ.எஸ்.கே.திஸ்ஸநாயக**

**திரு.பீ.பி.மல்லவராச்சி**

# நிறுவகக் கட்டமைப்பு



## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் குறிக்கோள்கள்

### பொதுவான குறிக்கோள்கள்

அ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய கொள்கையை வகுத்தமைப்பதில் மற்றும் தொழில்தருநர்களினதும் பணியாளர்களினதும் தொழில் மற்றும் பாதுகாப்பின் தன்மையைக் கவனத்தி லெடுத்து இருவரும் வேலையாற்றுகின்ற சூழல் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் ;

(ஆ) வேலைத்தலங்களில் தொழில் தொடர்பான விபத்துக்கள் மற்றும் ஊறுகளைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் ;

(இ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் விசாரணைகள், ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள், அளவீடுகள் மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றை நடத்துதல்,பெறுப்பேற்றல் மற்றும் அவற்றிற்கு உதவுதல் ;

(ஈ) உபகரணத்தை சரியாகப் பயன்படுத்துவது, தீங்கிளைக்கின்ற பொருட்கள், பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் முகவர்கள் அல்லது உற்பத்திப் பொருட்கள் அல்லது பிற வேறு தீங்குகள் பற்றி எந்த நிறுவனத்திற்கோ அல்லது ஆளுக்கோ ஆலோசனை சேவையை வழங்குதல் ;

(உ) தொழில்சார் உறவுகள் மற்றும் சுகாதாரத்தில் அத்துடன் தொடர்புபட்ட விடயங்களில் அறிவினை, பயிற்சியினைத் தேவைப்படுத்துகின்ற பணியாளர்கள், இருப்பாளர்கள், வேலையாளர்கள் அல்லது பிற வேறு நபர்களுக்கு அறிவூட்டுதல் மற்றும் தேவையான பயிற்சியை பிற வேற நிறுவனங்களுடன் அல்லது இலங்கை அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து அல்லது நிறுவகத்தினால் வழங்குதல் மற்றும் அத்தகைய கல்வி அல்லது பயிற்சியினைப் பூர்த்திசெய்வதன் பேரில் சான்றிதழ்கள் மற்றும் டிப்புளோமாக்களை வழங்குதல் ;

(ஊ) உபகரணத்தை சரியாகப் பயன்படுத்துவது, தீங்கிளைக்கின்ற பொருட்கள், பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் முகவர்கள் அல்லது உற்பத்திப் பொருட்கள் மற்றும் தீங்குகளாகத் தெரிந்தவற்றை தவிர்த்தல் பற்றிய தேவையான சேவைகளை வழங்குதல் ;

(எ) (i) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான விடயங்களில் நியமங்கள், நியதிகள், செய்முறைகள் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பான சட்டவாக்க தேவைப்பாடுகள் பற்றி அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் ;

(ii) வேலைச் செயன்முறை, பொருட்கள் மற்றும் முகவர்களை மதிப்பிடுதல் மற்றும் தீர்மானித்தல். மேற்பார்வைக்கமைவாக தடைசெய்யப்பட்டவை, மட்டுப்படுத்தப்பட்டவை அல்லது ஆக்கப்பட்டவையை வெளிப்படுத்தல் ;

(ஏ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தகவல்களை சேகரித்தல், தயாரித்தல், பரப்புதல் மற்றும் வெளியிடுதலை பொறுப்பேற்றல் அல்லது ஒருங்கிசைதல்;

(i) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான மாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் அல்லது ஏனைய ஒத்த நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல் அல்லது அனுசரணையளித்தல் மற்றும் பத்திரிகைகளில் வெளியிடுதல் ;

(ஐ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட அமைச்சுக்களுக்கிடையிலான கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் ;

(ஒ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார செய்முறையினை மேம்படுத்தும் நோக்கத்திற்காக நூலகங்கள் மற்றும் ஆய்வுகூடங்களைத் தாபித்தல் மற்றும் பராமரித்தல் ;

(ஓ) ஆராய்ச்சி மற்றும் விசேட ஆய்வுகூடங்களை விருத்திசெய்தல் ;

(ஔ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறையிலிருக்கின்ற தேசிய, சர்வதேச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது பிற வேறு தாபனங்களுடன் இணைப்புகளை வலையமைப்பினைத் தாபித்தல் ;

(∴) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் தேசிய நியமங்களைத் தாபித்தல்.

## 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது குறிக்கோள்களை அடைவதில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் திறமுறைகள்

- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கொள்கையை விருத்தி செய்வதில் அரசாங்காத்திற்கு உதவுதல் மற்றும் உரிய நேரத்தில் நாளதுவரைப்படுத்தல்.

- இரசாயனத்தைக் கையாளுதல், நிருமாணப் பாதுகாப்பு, தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களைத் தடுத்தல், சுற்றாடல் பாதுகாப்பு, கழிவுப்பொருள் முகாமைத்துவம் மற்றும் மன அழுத்தத்தைக் கையாளுதல் போன்ற அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை மையப்படுத்து வதனூடாக விழிப்புணர்வினை உருவாக்குவதனூடாக தொழில்சார் ஊறுகள் மற்றும் நோய்களை குறைப்பதற்கு தொழிற்றுறைக்கு உதவியுள்ளது.

- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர் மதிப்பீடுகளினால் தொழிலாற்றுகின்ற சூழலை செம்மைப்படுத்துவதற்காக இத்தொழிற்றுறைக்கு உதவியுள்ளதுடன், செம்மைப்படுத் தலுக்கான வழிகாட்டல்கள், தீர்வுகள் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை நடத்துவதற்கு தே.தொ.பா.சு.நிறுவகத்தில் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிதியத்தைஉருவாக்குதல் மற்றும் ஆராய்ச்சி அணிகளைப் பலப்படுத்துதல் அத்துடன் ஆராய்ச்சித் தாள்களைப் பிரசுரித்தமை மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் / நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தியமை மற்றும் ஆராய்ச்சி செய்தமை.

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தொழிற்றுறையில் சிறந்த செய்முறைகளைக் கௌரவிப்பதற்கும் இனங்காண்பதற்கும் 2 ஆவது தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சிறப்பு விருதுகள் போட்டி ஒழுங்கமைக்கப்பட்டது.

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி விழிப்புணர்வினை உருவாக்குவதற்கும் தொழில்சார் தன்மையைப் பலப்படுத்துவதற்கும் அதிக எண்ணிக்கையிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.

- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை ஏற்படுத்துவதற்கு அரம்பித்தமை.

- ஏதேனும் பௌதீக இரசாயனம் மற்றும் உயிரியல் முகவர்கள் அல்லது உற்பத்திப் பொருட்களிடமிருந்து வேலையாளர்களைப் பாதுகாப்பதற்கு தனிநபர் பாதுகாப்பு உபகரணத்தைச் சரியாகப் பயன்படுத்துவது தொடர்பில் விளக்க செய்முறையை நடத்தியமை.

- தொழிற்றுறைப் பிரதிநிதிகள் 450 இற்கும் மேற்பட்டோரின் பங்கேற்புடன் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாட்டினை ஒழுங்கமைத்துள்ளமை.

## 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்

1. **பயிற்சி**

| பயிற்சி மட்டம் | கற்கைநெறி | பயிற்சியின் காலப்பகுதி |
|---|---|---|
| நுழைவு மட்டம் | பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | |
| முதலாவது மட்டம் | கொதிகலனை இயக்குபவர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்<br><br>தொழிற்றுறைப் பாதுகாப்பினை மேம்படுத்தும் பயிற்சிப் பட்டறைகள்<br><br>தொழிற்றுறை தாதிகள் பயிற்சி<br><br>அலுவலகப் பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்<br><br>ஆய்வுகூட வேலையாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம ;<br><br>இரசாயனத்தைப் பாதுகாப்பாகக் கையாளுதல்<br><br>உணவினைக் கையாள்பவர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்<br><br>மனவழுத்தத்தைக் கையாளுதல் - தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கானது | |
| இரண்டாவது மட்டம் | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் கற்கைநெறி | 6 மாதம் |
| மூன்றாவது மட்டம் | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா | 01ஆண்டு |

2. **சூழலியல் கண்காணிப்பு சேவைகள்**

- உள்ளகக் காற்றின் தரத்தைக் கண்காணித்தல்
- புகை வெளியீட்டினைப் பரிசோதித்தல்
- தொழிற்சாலையினுள் உள்ள தூசி மட்டத்தைச் சோதித்தலும்
- சத்த மட்டத்தினைப் பரிசோதித்தல்
- அதியுயர் வெப்ப மட்டத்தைப் பரிசோதித்தல்

3 **தொழில் புரிவதற்கான உடல் தகுதி**

- கேட்கின்ற ஆற்றல் பற்றிய சோதனை
- இரசாயன தாக்கம் பற்றிய இரத்தப் பரிசோதனை

- நுரையீரல் தொழிற்பாடு பற்றிய சோதனை
- பார்க்கும் திறன் பற்றிய சோதனை


## 2016 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள்

**முதலாவது மட்டப் பயிற்சி**

**கைத்தொழிற்றுறை தாதியர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சான்றிதழ்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அவர்களது அறிவினைச் செம்மைப்படுத்தும் குறிக்கோளுடன் கைத்தொழிற்றுறை தாதியர்களுக்குப் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது. இந்தப் பயிற்சிப் பாடநெறியானது, தீங்கினை இனங்காணுதல், இடரினை மதிப்பிடும் திறன் பற்றி கலந்துரையாடும் ஆற்றல், விபத்தினை அறிவிக்கும் முறைமை மற்றும் கைத்தொழிற்றுறை தாதியர்களுக்கான தரவினைக் கையாளுதல் போன்றவற்றில் பரந்த அறிவினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறி 05 நாட்கள் நீடித்திருந்ததுடன், பங்குபற்றியவர்கள் வெற்றிகரமாக நிறைவுசெய்திருந்ததுடன் அதிகளவில் பாராட்டியுமிருந்தனர்.

- **தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மேற்பார்வையாளர்கள் மற்றும் தர மதிப்பீட்டு உதவியாளர்கள்**




**நிருமாணத் துறை மேற்பார்வையாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி**

சிறந்த தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார செய்முறை செயலாற்றுகை பற்றி கடை பணியாளர் களை மேற்பார்வையிடும் குறிக்கோளுடன் நிருமாணத் துறையில் மேற்பார்வையாளர்கள் மீது விசேட கவனஞ்செலுத்தி மூன்று நாட்களுக்குள் பூர்த்தி செய்வதற்காக இந்த விசேட பாடநெறி வடிவமைக் கப்பட்டுள்ளது. இவர்களுக்கு இடர் மதிப்பீடுகள் பற்றிய அனுபவம் பகிரப்பட்டிருந்ததுடன், தனிநபர் பாது காப்பு உபகரணங்களை சரியாகப் பயன்படுத்துவது தொடர்பிலும் பயிற்றுவிக்கப்பட்டிருந்தது.



**சூழல்சார் பாதுகாப்பு மற்றும் கழிவு முகாமைத்துவப் பயிற்சி**

இந்தப் பயிற்சியானது, இலங்கையில் சூழல் பாதுகாப்பு தொடர்புபட்ட சட்டவாக்கம் பற்றி கற்பிப்பதற்கும், இலங்கையில் கழிவகற்றும் முறை செய்முறையில் காட்டப்படும் வகையில் பயிற்சியளிப்பதற்கும் கைத் தொழிற்றுறையினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, கழிவு முகாமைத்துவ அதிகாரசபையிடமிருந்தும், சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்தும் பயிற்சி அமர்வு களை நடத்துவதற்கு வள ஆளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமே பிரதான பயிற்சி ஒழுங்கமைப்பாளர் என்பதுடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி விசேட விரிவுரைகளை வழங்கியுள்ளதுடன், பல்வேறு வகையான கழிவுப் பொருட் களைக் கையாள்கின்றபோது தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணத்தை சரியாகப் பயன்படுத்துவது பற்றி சில செய்முறை அமர்வுகளையும் நடத்தியிருந்தது.

**நிருமாணப் பாதுகாப்புப் பயிற்சி**

பொறியியலாளர் தொழில் அணியினை அணுகுவதற்காக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட விசேட பயிற்சியாகும். பங்குபற்றியோர் மேற்பார்வை யாளர்கள் என்பதுடன், இந்தப் பயிற்சியின் நோக்கம், இந்தக் குழுமத்தின், விசேடமாக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மையப்படுத்திய மேற்பார்வையிடல் இயலுமையை செம்மைப்படுத்துல் ஆகும். இவர்களுக்கு சிறந்த தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார செய்முறைகள் கற்பிக்கப் பட்டிருந்ததுடன், ஊக்குவிப்புத் திறனும் விருத்தி செய்யப்பட்டிருந்தது.

**மன அழுத்தத்தைக் கையாளுதல்**

இது, தனிப்பட்ட மன அழுத்தங்களுக்கான காரணங்களைக் இனங்காணுவதற்காக செய்முறை நுட்பங்களின் நுணுக்கங்களை விசேடமாக மையப்படுதியிருந்த இரண்டு நாள் நடத்தப்பட்ட மிகவும் சிறப்பான பயிற்சியாகும். விசேடமாக, பங்குபற்றியோருக்கு உசாவுகை விடயங்கள் பற்றி விழிப்படையச் செய்திருந்ததுடன், மன அழுத்தத்தைக் கையாள்வதில் உசாவுகை என்பதன் முக்கியத்துவம் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது.

**மின்சாரப் பாதுகாப்புப் பற்றிய பயிற்சி**

இது பாதுகாப்பான மின்சார வேலை பற்றி மின்னியலாளர்களின் திறன்களைச் செம்மைப்படுத்துவதற்காக நவம்பர் மாதம் 3 ஆம் மற்றும் 4 ஆம் திகதிகளில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையாக நடத்தப்பட்டிருந்தது. இந்தப் பாட நெறியில் பின்வருகின்ற பல்வேறுபட்ட தொழிற்றுறையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றுநர்கள் 41 பேர் இதில் பங்குபற்றியிருந்தனர்.

- கொக்கல காமன்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
- டீசல் & மோட்டார் என்ஜினியறிங் பீஎல்சி
- டி.எஸ்.ஐ பாதணி
- ஓறிற் அப்பிரல்ஸ் லங்கா (பிறைவெட்) லிமிடெட் போன்றவை



**கொதிகலன் இயக்குநர்களுக்கான பயிற்சி**

கொதிகலன் இயக்குநர்களுக்கான பயிற்சியானது பல கைத்தொழிற்றுறையாளர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததுடன், ஆரம்ப நிகழ்ச்சித்திட்டத்தில் சில பங்குபற்றுநர்களே பங்கேற்றிருந்தனர்.

**நிலை 2 பயிற்சியளித்தல்**

2016 ஆம் ஆண்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான இரண்டு கற்கை நெறிகள் நடத்தப்பட்டன. ஓவ்வொரு கற்கைநெறியும் 15 வார கால அளவினைக் கொண்டது. ஒரு கற்கை நெறியில் 17 மாணவர்களும் மற்றையதில் 25 மாணவர்களும் கலந்துகொண்டனர். இம் மாணவர்கள் அனைவரும் கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்திருந்தனர் என்பதுடன், இவர்களுக்கான சான்றிதழ் 2016 ஒக்டோபர் 16 ஆம் திகதி பட்டமளிப்பு விழாவில் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு வெற்றிகரமாக நிறைவுசெய்த மாணவர்களுடைய வேலைத்தலங்களில் தொழில்சார் விபத்துகள்

கணிசமானளவு குறைவடைந்திருந்தன. இவர்களில் அதிகமானோர் பாதுகாப்பு அலுவலர்களாகக் கடமை யாற்றுகிறார்கள். க.பொ.த. உயர்தர தகைமைகளுடன் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் ஆர்வமுள்ள எவரும் இக் கற்கைநெறியைத் தொடரலாம். படை வீரர்கள் கேட்டுக்கோண்டதன் பேரில் 2016 டிசெம்பர் மாத காலப்பகுதியில் 30 அங்கத்தவர்களின் பற்குபற்றலுடன் விசேட சான்றிதழ் கற்கை நெறியொன்று அரம்பிக்கப்பட்டிருந்தது.






- **<u>வாராந்த சான்றிதழ் கற்கைநெறி (16 ஆவது அணி) 2016 சனவரி 13 ஆம் திகதி</u>**





- **<u>வார இறுதி கற்கைநெறி ( 19 ஆவது அணி) 2016 ஓகஸ்ட 20 ஆம் திகதி</u>**





## நிலை 3 பயிற்சியளித்தல்

**1. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூன்று டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியிருந்தது. 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகளவிலான தேவையினால் நாம் மூன்று நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு அட்டவணைப் படுத்தியிருந்தோம் என்பதுடன், 10, 11 மற்றும் 12 ஆம் தொகுதி பங்குபற்றுநர்களுக்கான தெரிவுக்குரிய நேர்முகப்பரீட்சை நடத்தியதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நேர்முகப் பரீட்சைகள் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதத்தில் நடத்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு தொகுதியிலும் 34 மற்றும் 37 பாதுகாப்பு முகாமையாளர்கள் பங்குபற்றி மூன்று தொகுதிகள் பெப்ரவரி, மார்ச் மற்றும் செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் நடத்தப்பட்டிருந்தன.

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தேசிய டிப்புளோமாவானது, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட தொழிற்றுறையின் தேவை மற்றும் அவசியத்தினை மதிப்பிட்டதன் பின்னர் வகுத்தமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவ மாதிரி அலகுடன் மூன்று மாதிரி அலகுகள் உள்ளன. ஒவ்வொரு மாதிரி அலகின் இறுதியிலும் மாதிரி பரீட்சைகள் காணப்படுவதுடன், பரீட்சையின் பின்னர், பங்கு பற்றியவர்கள், அவர்கள் கற்றறிந்தவற்றினதும், அவர்களது தொழிற்றுறை அனுபவத்தினதும் அடிப்படையில் கருத்திட்ட அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தப் பயிற்சியானது, வகுப்பறை அமர்வுகள் மற்றும் துறைசார் பயிற்சிகளை உள்ளடக்கி வடிவமைக்கப் பட்டுள்ளது. இதன்படி, 'லோட் ஸ்ரார் பிறைவெட் லிமிடெட்', 'சிலோன் டொட் யாட் பிறைவெட் லிமிடெட்', 'பிறண்டிக்ஸ் பிறைவெட் லிமிடெட்','யுனி லிவோஸ் பிறைவேட் லிமிடெட்' போன்றோர் எமது துறை பயிற்சி தரப்பினர் ஆவார்கள்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், 2016 ஒக்டோபர் 16 ஆம் திகதி ஹலதாரி ஹோட்டலில் ''பட்டமளிப்பு விழாவினை'' ஒழுங்கமைத்திருந்ததுடன், இந்நிகழ்வினை வெற்றிகரமாகவும் நிறைவேற்றியிருந்தது.






தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், இத்தொழிற்றுறையின் வேண்டுகோளின் அடிப்படையில் குறித்த துறைக்கான பயிற்சிகளை வழங்குவதுடன், பயிற்சியளிக்கப்பட்ட எமது தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்கள் இந்தப் பயிற்சிகளில் தமது பெறுமதிமிக்க சேவையை நல்கி வருகின்றனர்.

மறுவகையில் வெளிநாட்டில் வேலைவாய்ப்பினை நாடுகின்றவர்களுக்கு மேலும் தகைமையைச் சேர்ப்பதனால் இது அதிகளவில் நன்மை பயக்கின்றது. தற்போது இந்தப் பாடநெறியினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் பல மாணவர்கள் வெளிநாடுகளில் சேவையாற்றிக்னறனர்.

## 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விசேட பயிற்சிகள்

### விருது விண்ணப்பம் பற்றிய விழிப்பூட்டல் பயிற்சி அமர்வு

இந்த பயிற்சி, எதிர்வருகின்ற 2016 ஆம் ஆண்டு ''தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகைமை விருதுகள்'' நிகழ்வில் பங்குபற்ற விரும்பிய எந்த தொழிற்றுறைக்கும் விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாக கருதப்பட்டிருந்தது. தகைமை விருதுகள் போட்டிக்குத் தயாராவதற்காக நேரத்தை அனுமதித்து, 2016 மார்ச் மாதத்தில் இந்த பயிற்சி நடத்தப்பட்டது. அதிக எண்ணிக்கையிலான தொழிற்றுறைகள் பயிற்சிப் பட்டறையில் பல வினாக்களுடன் கலந்துகொண்டிருந்ததுடன், நிபுணர்கள் குழாம் அடிக்கடி கேட்கப்படு கின்ற வினாக்களுக்கு தீர்வுகளை வழங்கியிருந்தனர். இது, விண்ணப்பத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதனையும், துறையினைப் பகுத்தாராய்வதிலும் பாரிய வெற்றியை ஈட்டித்தந்திருந்தது.

### தேசிய கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள்

### பாதுகாப்பு வாரம் - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஊக்குவிப்புப் பிரச்சாரம்

2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தினால் தே.தொ.பா.சு.நிறுவகத்தின் குறிக்கோள்களில் ஒன்றாக உரித்தளிக்கப்பட்டுள்ள தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய பிரச்சாரம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, தொழில் அணியின் அதேபோன்று பொது மக்களது பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு பல்வேறு ஊக்குவிப்பு செயற்பாடுகளை தே.தொ.பா.சு. நிறுவகம் ஒழுங்கமைத்துள்ளது.

*கருப்பொருள் – **2016 ஆம் ஆண்டுக்கான பிரச்சாரத்தின் கருப்பொருள் இடர்களை வெளிப்படுத்துதலும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீது முதலிடுதலும் என்பதாக இருந்தது.***

*வாராந்த செயற்பாடுகளை கொண்டாடுவதற்காக விசேட இலட்சணையொன்றும் வடிவமைக்கப் பட்டிருந்தது.*

*இலட்சணை*




**தேசிய பாதுகாப்பு வாரத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரான பத்திரிகை மாநாடு**

கௌரவ அமைச்சரால் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விசேட செய்தியொன்றினை தெரியப்படுத்தி, வெளியிடுவதற்காக பத்திரிகையாளர் மாநாடொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் திரு.டபிள்யு.டீ.ஜே.செனவிரத்ன அவர்கள் நாட்டின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தனது அர்ப்பணிப்பினைப் பிரகடனப்படுத்தியிருந்ததுடன், அமைச்சுக்களின் அர்ப்பணிப்பினையும் உறுதிப்படுத்தியிருந்தார்.

**6 ஆவது ஆசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆராய்ச்சி நிறுவகங்களின் கூட்டம்**

2016 ஆம் ஆண்டு தே.தொ.பா.சு. நிறுவகத்திற்கு விசேடமானதொரு ஆண்டாகும். ஏனெனில் சர்வதேச தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் கூட்டம் எப்போதுமில்லாதவாறு முதல் தடவையாக இலங்கையில் நடைபெற்றிருந்தது. 06 ஆவது ஆசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் கூட்டம் 2016 ஒக்டோபர் 09 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அனைத்து ஆசிய மற்றும் சார்க் நாடுகளிலிருந்தும் 20 தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிபுணர்கள் இந்த அமர்வில் பங்குபற்றியிருந்ததுடன், ஆசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் குழுமத்திற்கான வழிகாட்டியொன்றாக தொழில்நுணுக்க அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இது மூன்று நாட்கள் நடத்தப்பட்டிருந்ததுடன், பயிற்சிப்பட்டறை கலந்துரையாடலொன்றும் இந்தப் பிராந்தியத்தில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தின் இடர்களை வெளிப்படுத்துவதாகக் கருதப்பட்ட குறித்த தலைப்புகளில் குழும கலந்தாலோசனையும் நடத்தப்பட்டிருந்தது.


EXIT







கூட்டத்தின் இறுதிப் பெறுபேறாக விரிவான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.பங்குபற்றுநர்கள் கொழும்பில் நகர சுற்றுலாவினை மேற்கொண்டிருந்ததுடன், கொழும்பில் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நேரமும் ஒதுக்கப்பட்டிருந்தது. பங்குபற்றியவர்களுக்கு ‘‘சினமன் கிறாண்ட் ஹோட்டலில்’’ நாட்டு நடனம் மற்றும் நாட்டுணவு என்பவற்றுடன் மாநாட்டின் இறுதி நாளில் மிகவும் சிறந்த இரவு உணவும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

.



**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு – 2016**

இந்நிகழ்வானது தொழிற்றுறையிலுள்ள பாதுகாப்பு முகாமையாளர்கள் மற்றும் உயர் முகாமைத்து வத்திற்கு உரையாற்றும் நோக்கில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட எமது வருடாந்த நிகழ்வுகளில் ஒன்றாகும். இந்நிகழ்வு ஒக்டோபர் 12 ஆம் திகதி ஹலதாரி ஹொட்டலில் நடைபெற்றிருந்தது. தேசிய மற்றும் சர்வதேச பேச்சாளர்கள் உரையாற்றியிருந்த துடன், 500 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் சர்வதேச பிரதிநிதிகள் அனைவருக்கும் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந் தமையாலும், AOSHRI குரூப் தலைவர் டாக்டர்.கான் சிங்கப்பூரிலிருந்து AOSHRI கூட்டத்திலிருந்து வந்திருந்த பொழிப்பு குறிப்புரைகளை வழங்கியிருந்தமையாலும், இலங்கையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றிய சர்வதேச பார்வை பகிர்ந்து கொள்ளப் பட்டமையும், ASOHRI சர்வதேச கூட்டத்தின் பெறுபேறுகள் கோடிட்டுக் காட்டப்பட்டமையாலும், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி இலங்கை நிபுணர்கள் தொழில்நுணுக்க அமர்வில் சிறந்த முன்னளிக்கையை வழங்கியமையையாலும் வருடாந்த மாநாடு 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிகவும் விசேடமானதாக இருந்தது

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் புதிதாக எழும் அல்லது மீளெழும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எப்போதும் முயற்சிக் கின்றது. உலகளாவிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரச்சனைகள் தொடர்பில் புதிய கருத்துகளுக்கும் சிந்தனைகளுக்கும் தீர்வுகாணும் முகமாக எமது கைத்தொழிற் சமூகத்திடையே தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான அறிவைப் பகிர்ந்துகொள்வதற்கு மலேசியா, சிங்கப்பூர், கொரியா முதலான நாடுகளிலிருந்து சிறந்த பேச்சாளர்களைக் கொண்டுவருவதற்கு இயலுமாக இருந்தது.

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வருடாந்தப் பட்டமளிப்பு விழா**

எமது டிப்புளோமா கற்கைநெறியினை நிறைவுசெய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் மற்றுமோர் வருடாந்த நிகழ்வாகக் காணப்படுகிறது. எழுபதிற்கும் மேற்பட்ட டிப்புளோமா, சான்றிதழ் கற்கைநெறிகளை நிறைவு செய்தவர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சி மிகவும் வண்ணமயமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வு ஹலதாரி ஹொட்டலில் 2016 ஒக்டோபர் 14 ஆம் திகதி தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பல சிறப்பு விருந்தினர்கள் தலைமையில் நடைபெற்றிருந்தது.


Emerging Risks
and Investing on


International
Safety
Honeywell







## தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார தகைமை விருதுகள்

தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார தகைமை விருதுகள், 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது புதிய முயற்சிகளில் ஒன்றாகும். 2016 ஆம் ஆண்டில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகைமை விருதுகள் போட்டியை நடத்துவதற்கு தே.தொ.பா.சு.நிறுவகம் திட்டமிட்டிருந்ததுடன், விருது வெற்றியாளர்கள் மூன்று படிநிலையினைக் கொண்ட தொழில்நுணுக்க செயன்முறையினால் ஆக்கப்பட்டிருந்தனர். முதலில் விண்ணப்பப்படிவம் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், அதனை நிரப்பி சமர்ப்பிப்பதற்கு தொழிற்றுறைகளுக்கு மூன்று மாதங்கள் வழங்கப்பட்டிருந்தன. இரண்டாவதாக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிபுணர் குழாம் புள்ளியிடல் திட்டத்தின் அடிப்படையில் மீளாய்வொன்றை நடத்தியிருந்தது. இது தொழில்நுணுக்க மதிப்பீடொன்றாகும் என்பதுடன், மீளாய்விலிருந்து தெரிவு செய்யப்பட்ட தொழிற்றுறைகள், துறை பகுத்தாய்வு குறிக்கப்பட்ட திகதிக்கு ஒரு நாள் முன்பாக துறை பகுத்தாய்வு தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன், இத்துறையிலிருந்து 5 தொழில்நுணுக்க நிபுணர்களைக் கொண்ட ஆறு குழாம் உருவாக்கப் பட்டிருந்ததுடன், இவர்கள் தே.தொ.பா.சு நிறுவகத்தின் விருதுத் தெரிவு கொள்கைகள் பற்றி அறியச் செய்திருந்ததுடன் அவர்களது அர்ப்பணிப்பு பெறப்பட்டிருந்தது. ஆய்வுச் செயன்முறைகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், பிழைகளைக் குறைக்கும் நோக்கில் அறிக்கையைத் தயாரிப்பதற்கு மென்பொருள் பயன்படுத்தப்பட்டது.








**வேவ்வேறு தொழிற்றுறை வகைப்பாடுகளிலிருந்து 32 தொழிற்றுறைகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. இந்த விருது வழங்கல் வைபவம் "தாமரைத் தடாகம்" கலையரங்கில் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் இடம்பெற்றிருந்தது.**



**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவ முறைமை தொடர்பான தொழிற்றுறைக்கு ஆலோசனைச் சேவைகள்**


இடர் மதிப்பீடு ஒன்றினை நடாத்தியதன் பின்னர் குறித்த தொழிற்றுறைகளில் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை உருவாக்கும் முகமாக பாதுகாப்பு மற்றும் சுகாதார முறைமையினை வகுத்து தேவைப்படும் நிறுவனங்களிடையே வெளியிட்டது.

**முறையான உபகரணப் பயன்பாடு தொடர்பில் தேவையான சேவைகளை வழங்குதல்.**

தொழில் விவரக் குறிப்புகளுக்கு அமைவாகத் தனியாள் பாதுகாப்பு உபகரணங்களின் முறையான பயன்பாட்டை விளக்குவதற்குத் தேவையான போலிகளை வடிவமைத்து இத் தனியாள் பாதுகாப்பு உபகரணங்களின் முறையான பயன்பாடு தொடர்பான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டன.







**தொழில் புரிவதற்கான உடற்றகுதி - இலவச மருத்துவ பரிசோதனை முகாம்**

**‘மிடாஸ்’ மருத்துவ முகாமில் உதவுதல் - 2016 யூன் 03**







பணியாளர்களின் உடல் நிலையை முன்னேற்றுவதற்கான பிரதான உபாயங்களுள் ஒன்று பணிபுரிவதற் கான உடற்றகுதியை மதிப்பிடுதலாகும்.

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடு பல இயற்கை அழிவுகளுக்கு முகம் கொடுத்திருந்ததுடன், பியகம கைத்தொழில் வலயமும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது. பல வேலையாளர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டிருந்ததுடன். வேலையாளர்களுக்கு மருத்துவ உதவியை வழங்குவதற்கு வலயமானது தே.தெ.பா.சு.நிறுவகத்தின் ஆதரவினைத் தேவைப்படுத்தியிருந்தது. தே.தெ.பா.சு. நிறுவகமானது, வெள்ளத்தின் பின்னர் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் மருத்துவ முகாமொன்றை ஆரம்பித்திருந்தது. இந்த முகாமானது, பங்குபற்றுவதற்கு விரும்பிய ஏனைய பல கம்பனிகளுக்கும் வாய்ப்பினை வழங்கி மிடாஸ் தனியார் லிமிடெட்டில் ஒழுங் கமைக்கப்பட்டிருந்ததுடன் மருத்துவ பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, தோல் நோய் பரிசோதனை போன்றறை மருத்துவர் குழாத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அழிவின் பின்னர் தொழிற்றுறையின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் வருகைதராமையைக் குறைக்கும் நோக்கத்தடன் மருத்துவ நிபுணர்களினால் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டிருந்தது.

**ஹப்புத்தளை தோட்டத் தொழிலாளர்களுக்கும் பாடசாலை மாணவகளுக்கும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறை**

இந்த CSR கருத்திட்டம் ஹப்புத்தளை நகரத்தின் மத்தியில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்த இடத்தைத் தெரிவு செய்தமைக்கான குறித்த காரணம் இந்த நகரத்தைச் சுற்றியிருந்த பல தேயிலைத் தோட்ட முகாமையாளர்கள் மற்றும் பொது சுகாதார அலுவலர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் விசேட வேண்டுகோள் விடுத்ததன் அடிப்படையிலமைந்திருந்தது. தேயிலைத் தோட்ட முகாமையாளர்கள் தமது பணியாளர்களுக்கு முதலுதவிச் சிகிச்சை பயிறிசியொன்றுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர். பாடசாலைகள், முதலுதவி பயிற்சியின்மை, முதலுதவிப் பெட்டி இன்மை மற்றும் முதலுதவிப் பெட்டிக்கு குறித்த மருந்துகள் இன்மை போன்ற பிரச்சினைகளைக் கொண்டிருந்தன. மேலும், பல் மருத்துவ வசதியை நாட முடியவில்லையென்ற பிரச்சினையையும் அவர்கள் கொண்டிருந்தனர். மேலும், பொது சுகாதார அணி, நகரத்தைச் சுற்றியிருக்கின்ற பெண்கள், சிறுவர் சேமநல நிலையங்களுக்கு நீரைச் சேகரிப்பதற்கு நீர்த் தாங்கிகள் இல்லை என்ற பிரச்சினையைக் கொண்டிருந்தனர். இந்த வேண்டு கோள்களின் அடிப்படையில் தொழில்சார் மற்றும் பாடசாலை முதலுதவிப் பயிற்சி மற்றும் நடமாடும் பல் மருத்துவ வசதி ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன், 8 முதலுதவிப் பெட்டிகள் மற்றும் நீர் சேகரிப்பு தாங்கிகள் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன. இந்த நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்கிய அனைவருக்கும் நாம் மிகவும் நன்றியுடையவாகளாக இருந்திருந்தோம்.

**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் கருத்தாய்வும் ஆராய்ச்சியும்**

தே.தொ.பா.ச.நி, கொழும்பு விஞ்ஞான பீடத்தில் கைத்தொழிற்றுறை புள்ளிவிபரவியலில் அவர்களது விஞ்ஞான மாணியின் பகுதியாக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்புபட்ட ஆராய்ச்சியை நிறைவுசெய்யவதற்கு பொறுப்பேற்றுள்ள 3 பல்கலைக்கழக மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்துள்ளது. ஆராய்ச்சித் தலைப்புகள் பின்வருமாறு;

1. இலங்கையில் உற்பத்தி மற்றும் கைத்தொழில் வேலையாளர்களிடையே தொழில்சார் ஊறுகள் பற்றி அறிக்கையிடாமைக்கான காரணங்களை மதிப்பிடுதல்.
2. புற்றுநோய் வைத்தியசாலைக்கு வருபவர்களிடையே தொடர்புபடுகின்ற வேலையை இனங்காணுதல்.
3. கொழும்பு இருதய கிளினிக்குக்கு வருகின்ற நோயாளிகளுக்கிடையே தொடர்புபடுகின்ற வேலையை மதிப்பிடுதல்.

ஆராய்ச்சி காண்பிப்புகளை எமது இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வேலைக் கிரமம்**


தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, சகல வேலைத்தளங்களிலுமுள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும், சுகாதாரத்தை உயர்த்தும் நோக்கில் தனது வேலைக் கிரமத்தை அமைத்துக் கொள்கின்றது. இந்த இலக்கினை எட்டுவதற்கு பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றது.

***சூழலியற் கண்காணிப்பு*** - தொழிற்றுறையில் வேலைசெய்யும் சூழலின் தரத்தை உறுதிசெய்து கொள்ள வெப்பநிலை, ஒளி, சத்தம், கிருமித் தொற்றுள்ள வாயுக்கள் மற்றும் உள்ளக வளியின் தரம் முதலான வேலைத்தலச் சூழல்சார் ஆபத்துகளை அளவிடும் பொறுப்பை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் எடுத்துக்கொள்கின்றது. இது 2015 ஆம் ஆண்டில் 150 இற்கும் மேற்பட்ட வேலைத்தல சூழலியற் கண்காணிப்புச் சேவைகளை வழங்கியுள்ளதுடன், இது 2016 ஆம் ஆண்டில் 300 என்பதாக விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

***உயிரியற் கண்காணிப்பு*** – தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழிற்றுறையின் தேவைகளில் ஒன்றான வேலை செய்வதற்கான உடற்றகுதி மதிப்பீட்டுச் சேவையினை மேற்கொண்டு வருகிறது. அதற்கமைய தொழிலாளர்களில் வெளிப்படும் நோய் அறிகுறிகளுக்கு அமைவாக உடற் பரிசோதனை, உடல் நிறைச் சுட்டிக் கணிப்பு, குருதி அமுக்கம் மற்றும் நாடித்துடிப்பு விகிதப் பரிசோதனைகள், கட்புலப் பரிசோதனை, தொடர்ச்சியான இரத்தப் பரிசோதனை செவிப்புலப் பரிசோதனை நுரையீரல் தொழிற்பாடு குறித்த பரிசோதனை முதலான பரிசோதனைகளை நடாத்துகின்றது.

***இடர் மதிப்பீடும் சோதனை நடவடிக்கைகளும்*** - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, இடர் மதிப்பீடு மற்றும் தொழிற்றுறைசார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சோதனை நடவடிக்கைகளை நடாத்துவதுடன், தொழிலகத்தில் காணப்படும் தொழில்சார் ஆபத்துகளைச் சுட்டிக்காட்டி அவற்றைக் குறைப்பதற்கான பரிந்துரைகளையும் வழங்குகின்றது. அதுமட்டுமல்லாமல் இடர் மதிப்பீடு மற்றும் சோதனை நடவடிக்கைகளில் ஒழுங்கினைப் பேணுவதற்கான புதிய மென்பொருளை தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது.

- ***இடர் மதிப்பீடு மற்றும் அறிக்கை தயாரித்தலுக்கு உதவுதல் - அறிக்கை எழுதுவதற்கான புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியமை (i-pad மற்றும் தனிப்பயனாக்கு படிம அச்சுடன்கூடிய தொடரறா மென்பொருள்***
- **‘புளு மவுண்ரேய்ன் கொண்ஸ்றக்சன்’ என்பதற்கான கொள்கை விருத்தி**



**பாதுகாப்பு வாரத்தில் பல்கலைக்கழகங்களுடன் கூட்டிணைவு**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனிதவள முகாமைத்துவத் துறையுடன் இணைந்து 2016 ஒக்டோபர் 13 ஆம் திகதி பயிற்சி அமர்வு ஒன்றினை நடாத்தியிருந்தார்கள்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் இயந்திரப் பொறியியற்றுறையுடன் இணைந்து நடாத்திய முழு நாள் செயலமர்வினை பல்கலைக்கழகத் துணைவேந்தர் பாராட்டியதுடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தரத்தினை மேம்படுத்துவதற்கும் நாட்டில் பாதுகாப்புக் கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் தனது முழுமையான அர்ப்பணிப்பையும் வழங்கியிருந்தார். தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவ பீடத்திற்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதுடன், சமூக மருத்துவத் துறையில் பட்டப்பிற்படிப்பு மாணவர்களுக்கான சில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துகின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியின் சுகாதார விஞ்ஞானத் துறைக்கு சேவைகளை வழங்குகின்றது.




**தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற முயற்சிகள்**

- **தே.தெ.பா.சு.நிறுவகத்திற்கான தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முகாமைத்துவ முறைமை**
- **இணையத்தைச் சீரமைத்தல்**
- **தே.தெ.பா.சு.நிறுவகத்தின் தகைமைகள் மற்றும் பாதுகாப்பான கடவுச்சீட்டு முறைமை**
- **ISO 9001**
- **தே.தெ.பா.சு.நிறுவகத்திற்கான வெட்டுமுகத்தோற்றம்**




**வெளியீடுகள்**







**நிறுவனத்தின் திடநிலையும் அதன் வளர்ச்சியும்**


சேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழிற்றுறைக்கான முதன்மைச் சேவை வழங்குநராகத் தனது பெயரை நிலைநாட்டியுள்ளது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2015 ஆம் ஆண்டில் தனது முன்னேற்றத்துக்கான முதல் அடியை எடுத்துவைக்க விரும்பி "உற்பத்தித்திறன் விருதுகள் 2015" விருதுக்கு விண்ணப்பித்தது. அதற்காக உற்பத்தித்திறன் கருத்திட்ட முன்மொழிவொன்றையும் விசேட இலட்சினை ஒன்றையும் உருவாக்கி, உற்பத்தித்திறன் விருதுகள் சாதனை உத்தியை அடைவதற்கான விரிவானதொரு கருத்திட்டத்தை ஆரம்பித்திருந்தது.


**2011 தொடக்கம் 2016 வரை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் சேவை வழங்கும் இடப் பரம்பல்**





சேவை வழங்கலானது 2011 இல் 33 தொழிற்றுறைகளை மட்டும் உள்ளடக்கி மேல்மாகாணத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது.




சேவை வழங்கலானது 2012 இல் 60 தொழிற்றுறைகளை மட்டும் உள்ளடக்கி மேல் மாகாணத்திற்கும் மத்திய மாகாணத்திற்கும் மட்டுப்படுத்தப்பட்டது.




2013 இல் மேல்,மத்திய,தென்,வடமேல்,வடக்கு மாகாணங்களில் 90 தொழிற்சாலைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன




2015 -2016 இற்கிடையில் 500 தொழிற்சாலைகளை உள்ளடக்கி எமது சேவைகளை வழங்க முடியும்

## தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கற்கை நூலகம்

- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் தரைத் தளத்தில் அமைந்திருக்கும் நூலகமானது, நூல்கள், பருவ இதழ்கள், கையேடுகள், செய்தி அறிக்கைகள், கட்டுரைகளைக் கொண்டிருக்கின்ற தொழில்சார் பாதுப்புக்காக மட்டுமே குறித்தொதுக்கப்பட்டுள்ள விசேட நூலகமாகும். இது தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிக் கற்பதற்கு ஆர்வமுள்ள வாசகர் எவரும் பயன்படுத்க்கூடிய உசாத்துணை நூலகமாகும். மேலும், எமது நூலகம், அனைத்து வேலை நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் வாசகர்களுக்காக திறந்திருக்கின்றது.

பின்வரும் வகையான புத்தகங்கள் நூலகத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

- கைத்தொழில்
- சூழல்
- பொதுமக்கள்
- வேலைக்குகந்த சூழல்
- தொழில்நுணுக்கப் பாதுகாப்பு
- இரசாயனங்களிலிருந்து பாதுகாப்பு
- தொழில்சார் நோய்கள்
- கைத்தொழிற் சட்டங்களின் சட்டவாக்கம்
- நச்சுப் பொருளியல்
- தண்ணீர் மற்றும் சுத்திகரிப்பு

## நிதிப் பகுப்பாய்வு 2015 – 2016

| | 2015 | 2016 |
|---|---|---|
| தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பாடநெறியிலிருந்து கிடைத்த வருமானம் | 8,407,400.00 | 13,420,433.00 |
| சூழலியல் நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த வருமானம் | 8,919,300.00 | 9,380,900.00 |
| பிற நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைகன் மூலம் வழங்கிய சேவைகளிலிருந்து கிடைத்த வருமானம் | 2,077,484.00 | 3,363,933.00 |
| ‘நனோ’ தொழில்நுட்பக் கருத்திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் | | |
| மருத்துவப் பரிசோதனை நடவடிக்கைகள் மூலம் கிடைத்த வருமானம் | 3,017,700.00 | 1,753,550.00 |
| கட்டட வாடகைமூலம் கிடைத்த வருமானம் | | |
| தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தினத்திலிருந்து பெறப்பட்ட வருமானம் | | 15,352,750.00 |
| (தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அபிவிருத்தி நிதி) வட்டி மூலம் கிடைத்த வருமானம் | 2,992,408.91 | 4,979,759.00 |
| ஏனைய வருமானங்கள் | 61,022.00 | 247,308.00 |
| **மொத்தம்** | 25,475,314.91 | 48,498,633.84 |

## நிதிச் செயலாற்றுகைக் குறிப்பு

**2015 திசெம்பர் 31 இலுள்ளவாறான ஐந்தொகை**

| | | 2016 | 2015 |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | **ரூபா** | **ரூபா** |
| **அசையும் சொத்துகள்** | | | |
| பணமும் பணத்திற்கு நிகரானவையும் **குறிப்பு 1** | | 4,458,171.75 | 753,803.60 |
| பெறக்கக்கூடியன **குறிப்பு 2** | | 14,223,633.35 | 9,574,102.02 |
| அபிவிருத்தி நிதி | | 59,950,019.76 | 46.252.823.65 |
| | | 78,631,824.86 | 56.580.729.27 |
| **அசையாச் சொத்துகள்** | | | |
| திறைசேரிக் கணக்குகள் | | 267,500.00 | 267,500.00 |
| இயந்திரப் பொறிகள் உபகரணங்கள் | **குறிப்பு 3** | 21,137,628.38 | 21,890,542.61 |
| அமைச்சினால் செய்யப்பட்ட மூலதனச் செலவுகள் | | - | - |
| | | 21,405,128.38 | 22,158,042.61 |
| மொத்தச் சொத்துகள் | | 100,036,953.24 | 78,738,771.88 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடப்புப் பொறுப்புகள்** | | | |
| செலுத்தக்கூடியவை **குறிப்பு 5** | | 1,997,414.53 | 1,819,228.15 |
| | | 1,997,414.53 | 1,819,228.15 |
| மொத்தப் பொறுப்புகள் | | | |
| தேறிய சொத்துகள் | | 98,039,538.71 | 76,919,543.73 |
| **தேறிய சொத்துகள்** | | | |
| திரட்டிய மேலதிகம் | **குறிப்பு 4** | 92,206,989.71 | 59,862,816.71 |
| திறைசேரி இலாபம் | **குறிப்பு 6** | 4,182,549.00 | 15,406,726.97 |
| மருத்துவ உபகரணங்கள் நன்கொடை – தேசிய விஞ்ஞான தாபனம் | | 1,650,000.00 | 1,650,000.00 |
| | | 98,039,538.71 | 76,919,543.73 |

டபிள்யூ.ஜே.எல்.யூ. விஜயவீர
தலைவர்
தே.தொ.பா.சு.நி

பீ.எம்.கே. பெரேரா
உ.ப. நிதி
தே.தொ.பா.சு.நி

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்**
**2016 திசெம்பர் 31 இலுள்ளவாறு**

| **வருவாய்** | **2016** | **2015** |
|---|---|---|
| திறைசேரி மானியம் | 3,200,000.00 | - |
| தொழிற்பாட்டு வருமானம் | 48,498,633.84 | 29,523,539.91 |
| | 51,698,633.84 | 29,523,539.91 |

கழிக்க:
**செலவுகள்**

| | | |
|---|---|---|
| நிருவாகச் செலவுகள் | 31,771,349.69 | 20,031,368.05 |
| நிதி அறவீடுகள் | 21,381.88 | 45,192.03 |
| பெறுமானத்தேய்வு | 4,104,282.61 | 2,360,194.80 |
| மொத்தச் செலவுகள் | 22,436,754.88 | 22,436,754.88 |
| **வருடத்துக்கான மிகை** | **15,801,619.66** | **7,086,785.03** |

## நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

### 1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 1.1. நிறுவனத்தை அறிக்கையிடல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி இலங்கை தொழிற்சங்க உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டது. எமது நிறுவனமானது முறையான சுகாதாரம், பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் அனைத்து மக்களுக்கும் சிறந்த வேலைச் சூழலை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. இந்த நிறுவனம், இல. 97, ஜாவத்தை வீதி, கொழும்பு – 05 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

#### 1.2. முதன்மைச் செயற்பாடுகளும் நடவடிக்கைகளின் தன்மைகளும்

தே.தொ.பா.சு.நி, முறையான சுகாதாரம், பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் அனைத்து மக்களுக்கும் சிறந்த வேலைச் சூழலை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. இதன் செயற்பாடுகள் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளைப் பரப்புதல், அறிவுரை ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இந்த நிறுவனம் தொழிலாளர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குவதோடு இந்த பயிற்சிகளால் பயனடையக்கூடிய ஏனைய தரப்பு மக்களுக்கும் பயிற்சிகளை வழங்குகிறது. அத்தோடு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் ஆய்வுக் கற்கைகள், ஆராய்ச்சிகள் என்பவற்றுக்கும் தனது ஒத்துழைப்பை வழங்குகின்றது.

#### 1.3. தயார்ப்படுத்தலுக்கான அடிப்படை

(அ) இணக்கக் கூற்று

நிறுவனத்தின் நிதிக்கூற்றானது ஐந்தொகை, வருமானக் கூற்று, உரிமைப் பங்கில் மாற்றக் கூற்று, பண ஓட்டக் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கான குறிப்பு முதலானவற்றைக் கொண்டுள்ளது. இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ("ICASL") பரிந்துரைக்கப் பட்ட சிறு முயற்சியாளர்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கு (SLASSE) அமைவாக இக் கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன.

(ஆ) அளவீடுகளுக்கான அடிப்படை

நிதிக்கூற்றானது வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதிக்கூற்றின் பணவீக்கக் காரணிகளுக்காக எந்தவொரு சரிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கையாளப்படுகின்ற நாணயம்

நிதிக்கூற்றானது நிறுவனத்தின் தொழிற்படு நாணய அலகான இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றது.

## (2) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

### i. இனங்காணுதலும் அளவீடும்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன செலவற்ற திரட்டிய பெறுமானத்தேய்வு மற்றும் திரட்டிய பழுது இழப்புகள் என்பனவற்றில் அளவிடப்படுகின்றன.

ஒரு இயந்திரப்பொறி அல்லது உபகரணத்தின் செலவு என்பது அதனது கொள்வனவு விலை மற்றும் அதன் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக்கேற்ற செயல்படு தன்மைக்குக் கொண்டு வருவதற்கு உறப்படுகின்ற நேரடிச் செலவு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

ஒரு ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண வகையின் பாகத்தினை மாற்றுவதற்கு உறப்பட்ட செலவு தனியாகக் கணக்கு வைக்கப்படும் செலவானது அகற்றப்படும் பாகத்தினைக் காவிச்செல்லும் கூலியுடன் இணைத்து மூலதனச் செலவு வைக்கப்பட்டது. இதனாலுண்டான பிற செலவுகள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண வகையில் அடங்கும் எதிர்காலப் பொருளியல் நன்மைகளை அதிகரிக்கும் பட்சத்திலேயே மூலதனச் செலவில் வைக்கப்படுகின்றன.

### ii. பெறுமானத்தேய்வு

பெறுமானத்தேய்வு ஆதனத்தின் கணிக்கப்பட்ட பாவனைக் காலம் மீதான ஓர் நேர்கோட்டு அடிப்படையிலான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலப்பகுதிக்காக மதிப்பிடப்பட்ட பாவனைக்காலம் பின்வருமாறு:

| | ஆண்டு |
|---|---|
| பொறித்தொகுதி மற்றும் இயந்திரம் | 10 |
| கணினி உபகரணங்கள் | 5 |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 10 |
| ஒலி அமைப்புச் சாதனங்கள் | 5 |
| மருத்துவ உபகரணங்கள் | 10 |
| ஏனைய சொத்துகள் | 10 |

கொள்வனவு செய்த ஆண்டுக்கு பெறுமானத் தேய்வு இல்லை என்பதுடன் அகற்றப்படுகின்ற ஆண்டில் முழுமையான பெறுமானத்தேய்வு என்பது பெறுமானத் தேய்வுக் கொள்கையாகும்.

### iii. நிலையான சொத்துக்கள்

நிறுவகமானது ஆரம்பிக்கப்படுகின்றபோது, தொழில் அமைச்சு மற்றும் திணைக்களத்திலிருந்து காலத்திற்கு காலம் மாற்றப்பட்ட சில சொத்துக்களைக் கொண்டிருக்கின்றது. 2013 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டதுடன், ஐந்தொகையில் முன்னைய ஆண்டு சீராக்கலின் கீழ் மதிப்பிறக்கம் செய்யப்பட்டிருந்தது.

### iv. புதிய மருத்துவ உபகரண கொள்வனவு

தேசிய ஆதார நிறுவகம், புதிய நனோ தொழில்நுட்ப மருத்துவ உபகரணத்தைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா நிதியினை மாற்றியிருந்ததுடன், இந்தத் தொகை ஏற்கனவே பெறப்பட்டு 31.12.2013 இல் கொள்வனவு செய்யாததன் காரணமாக ஐந்தொகையில் சேர்க்கப்பட்டுள்ளது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

எல்ஈடபிள்யூ/என்ஐஓஎஸ்எச்/எவ்ஏ/2016

මගේ අංකය / எனது இல. / My No. }  
මබේ අංකය / உமது இல. / Your No. }  
දිනය / திகதி / Date } 2017 ஆகஸ்ட் 17

தலைவர்,
தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம்

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, நிதிகளிலான மாற்றங்கள் கூற்று, முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச்சட்டத்தின் 17(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை நிறுவகத்தின் தலைவருக்கு 2017 ஜுலை 12 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

(i) மீளாய்வாண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றினை நேர்முறையின் கீழ் தயாரிக்கும் போது நிறுவனம் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மாதிரிகளினை உள்ளடக்கக்கூடாது. எவ்வாறாயினும், காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது நிறுவனத்தினால் பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு உள்ளடக்கப்பட்டுள்ளமை.

(ii) காசு உட்பாய்ச்சல்களின் மூலங்கள், அறிக்கை காலப்பகுதியின் போது பணம் விரிவாக்கப்பட்ட முறைகள் மற்றும் அறிக்கைத் திகதியில் காசு

மீதி காசுப் பாய்ச்சல் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டதற்கு இணங்க தயாரிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், காசு செலுத்துகைகள் மற்றும் பெறுவனவுகள் கொடுக்கல் வாங்கல்களின் அறிக்கையில் செயற்பாட்டு, முதலீட்டு மற்றும் நிதி நடவடிக்கைகளின் கீழ் அறிக்கையிடுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான முரண்களினை சுட்டிக்காட்டுவதனூடாக நிறுவனம் அதனை தயாரித்திருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03**

நியமத்தினுடைய 12 ஆம் பந்திக்கமைய அரச மானியங்களினுடைய கணக்கீடுகளிற்கு பிரயோகிக்கப்பட வேண்டிய கணக்கீட்டு கொள்கையினை முகாமைத்துவம் அடையாளம் கண்டிருக்கவில்லை. மற்றும் 2015 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான அமைப்பிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,650,000 மானியங்கள் தொகை நிதி நிலைமை கூற்றில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 07**

நியமத்திற்கமைய நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 1,372,591 கிரயமான மருத்துவ மற்றும் மேற்பார்வை உபகரணம் (Medical & Monitoring Equipment) முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்ததுடன், தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டவாறு இருந்தது. அதற்கமைய, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இற்கமைய தோன்றிய மதிப்பீட்டு வழு திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டிற்கான ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு ரூபா 138,000 கடன்பட்டோர் மீதிகளிலிருந்து குறைத்துக் காண்பிப்பதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய செலவினமாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க, பொது நிதிகள் சுற்றிக்கை | ஒவ்வொரு ஆண்டினுடைய மார்ச் 17 திகதிக்கு முன்னர் முன்னைய ஆண்டினுடைய மதிப்பீட்டுச் சபை நடாத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், தொடர்புடைய அறிக்கைகளிளுடைய பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் பொது நிதி பணிப்பாளர்க்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவு | ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தினையுடைய ஊழியர்களுக்கு பணிப்கொடை ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்படவேண்டிய போதிலும், நிறுவனத்தினுடைய மூன்று ஊழியர்களுக்கு அவ்வாறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பந்தி | தொடர்ந்து வரும் மாத்தினுடைய இறுதி அல்லது அதற்கு முன்னர் ஊழியர்களின் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு செலுத்தப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக நிறுவனத்தால் ரூபா 3,273 மிகைக் கட்டணமொன்று செலுத்த நேரிட்டது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 7,086,785 உடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 15,801,620 மிகையாகக் காணப்பட்டது. அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 8,714,835 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இருந்த போதிலும், நிர்வாகச் செலவினம் ரூபா 11,739,982 ஆல் அதிகரித்திருந்ததுடன், செயற்பாட்டு வருமானம் ரூபா 18,975,094 இனாலும் மற்றும் திறைசேரியின் மானியங்கள் ரூபா 3,200,000 இனாலும் அதிகரித்தமை நிதிசார் விளைவில் அதிகரிப்புக்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும், நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நிதிசார் விளைவு அதிகரித்திருந்ததுடன், மற்றும் 2015 ஆம் ஆண்டில் 48 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மீண்டும் 2016 ஆம் ஆண்டில் 45 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர்களுக்கான ஊதியங்கள் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடுகளினைக் கருத்திற்கொண்டதன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் நிதியத்தினுடைய பங்களிப்பு ரூபா 13,397,902 தொகையாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டு வரை அது தொடர்ச்சியாகக் அதிகரித்திருந்ததுடன், 2015 ஆம் அண்டில் பற்றாக்குறை 45 சதவீதமாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டில் மீண்டும் அது ரூபா 23,280,457 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச்சட்டத்தின் உறுப்புரைக்கமைய, நிறுவகத்தின் பிரதான நோக்கங்களாவன.

7

(அ) தொழில் வழங்குனர் மற்றும் ஊழியர்களினுடைய தொழில் மற்றும் பாதுகாப்பின் தன்மையினை கருத்திற்கொண்டு தொழில் வழங்குனர் மற்றும் ஊழியர்களின் வேலைச் சூழல் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான தேசிய கொள்கையினுடைய முறைமைப்படுத்தலுக்கு அரசுக்கு அறிவுறுத்தல்

(ஆ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் புலனாய்வுகள், கற்றல் திட்டங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஆய்வுகளினை மேற்கொள்ள மற்றும் உதவியளித்தல்

(இ) யாதாயினும் நிறுவகம் அல்லது நபர்க்கு உபகரணங்களினுடைய சரியான பயன்பாடு, ஆபத்தான பொருட்கள், பௌதீக இரசாயணம் அல்லது உயிரியல் முகவர்கள் அல்லது பொருட்கள் அல்லது ஏதேனும் வேறு ஆபத்து தொடர்பாக ஆலோசனை சேவையை வழங்குதல்

(ஈ) நிறுவனத்தினால் அல்லது ஏதேனும் ஏனைய ஸ்தாபனம் அல்லது இலங்கை அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகம் இரண்டில் ஏதேனுமொன்றின் பங்குபற்றலுடன் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மற்றும் தொடர்புடைய விடயங்களில் அறிவு மற்றும் பயிற்சி தேவைப்படுகின்ற ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் அல்லது ஏதேனும் ஏனைய நபர்களுக்கு கல்விபுகட்டல் மற்றும் தேவையான பயிற்சியினை வழங்குவதற்கு மற்றும் அப்படிப்பட்ட கல்வி அல்லது பயிற்சியின் பூர்த்தியில் சான்றுப்பத்திரம் அல்லது டிப்ளோமா விருது வழங்குதல்

(உ) உபகரணங்களின் சரியான பயன்பாடு, ஆபத்தான பொருட்கள், பௌதீக, இரசாயணம், உயிரியல் முகவர்கள் அல்லது பொருட்கள் மற்றும் சமூகம் சார்ந்த ஆபத்துக்கள் மற்றும் அறியப்பட்ட ஆபத்துக்களினை தவிர்த்தல் மீதான தேவைப்படும் சேவைகளை வழங்குவதற்குதல்

(ஊ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தகவல்களினுடைய சேகரிப்பு, தயாரிப்பு, பரவச் செய்தல் மற்றும் வெளியீட்டில் பங்குபற்றுவதற்கு அல்லது தலையிடுதல்

(எ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புடைய மாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், களியாட்ட விருந்து அல்லது

அப்படிப்பட்ட ஏனைய சமமான நிகழ்ச்சிகள் மற்றும் பத்திரிகையில் பிரசுரித்தலை திட்டமிடுவதற்கு அல்லது அனுசரனை வழங்குதல்

(ஏ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தினுடைய மேம்படுத்தல் மற்றும் செயற்பாட்டை முன்னேற்றஞ் செய்யும் நோக்கத்திற்காக வாசிகசாலைகள் மற்றும் ஆய்வுகூடங்களினை நிறுவுவதற்கு மற்றும் பராமரித்தல்

(ஐ) ஆய்வு மற்றும் விசேட ஆய்வுகூடங்களினை அபிவிருத்தி செய்வதல்

(ஒ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் தேசிய நியமங்களினை நிறுவுவதற்கு,

மேற்குறிப்பிட்ட நோக்கங்களினுடைய அடைதல் தொடர்பாக செயற்பாட்டு திட்டங்கள் மற்றும் செயல்முன்னேற்ற அறிக்கைகளுக்கமைய பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில் மற்றும் தொழில் உறவுகள் செயலாற்றல் அமைச்சு, தொழில் திணைக்களம் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனத்துடன் இணைந்து இலங்கையில் தொழில்சார் பாதுகாப்பினை நிறுவுவதற்கு தேசிய கொள்ளையொன்றினுடைய அமுல்படுத்தலுக்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இலங்கையில் தேசிய கொள்கையொன்றினை விசேட நோக்கமொன்றாக நிறுவுவதற்கு, தொழில்சார் விபத்துக்கள், நோய்கள் மற்றும் நோய்களுக்கான நஷ்டஈட்டை செலுத்துதல் மீதான தகவல்களினை திரட்டுவதற்கு முறைமையொன்று ஆரம்பிக்க மற்றும் பராமரிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரை நிறுவனத்தில் அவ்வாறான முறைமையின் நிறுவுதலுக்கு அவ்வாறான தந்திரோபாய திட்டமொன்று காணப்படவில்லை.

(ஆ) இலங்கையில் தொழில்சார் பாதுகாப்பினை நிறுவுவதற்கு தேசிய கொள்கையினுடைய அமுல்படுத்தலுக்கு தந்திரோபயமொன்றாக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான புதியதொரு அதிகாரச் சட்டத்திற்கு உறுதிகொண்டுள்ளதாக காட்டப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவனம் ஸ்தாபிப்பிலிருந்து 07 வருட காலமொன்று கடந்திருந்த போதிலும், 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார

புதிய அதிகாரச்சட்டத்தினுடைய 3(1) ஆம் பிரிவிற்கமைய நிறுவனத்தினுடைய ஆய்வு செயற்பாடுகளினை முதன்மை பயிற்சியுடன் நடாத்துவதற்கு ஆய்வு உத்தியோகத்தர்களுடன் பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் மற்றும் சுகாதாரத்தின் 13(1)(ஓ) ஆம் பந்தியின் உறுப்புரைகக்கமைய ஆய்வுகூடங்களினுடைய முன்னேற்றம் தொடர்பில் முகாமைத்துவத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரை கருத்திற்கொள்ளத்தக்கதொரு அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 3(1)(கா) ஆம் பந்தியுடைய உறுப்புரைகளில் தேசிய நியமங்களினுடைய நிறுவுகை நிறுவனத்தினுடைய பிரதான நோக்கமொன்றாகக் காணப்பட்ட போதிலும், அதன்மைய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆகையினால், அது தொடர்பில் சர்வதேச தொழில்சார் அமைப்பினுடைய மாநாடுகளில் ஸ்திரப்படுத்துவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஆகையினால், வெளித்தரப்பு வணிக நிறுவனங்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான ஆய்வு அறிக்கைகளினுடைய விநியோகத்தில் சர்வதேச நியமங்களினை மாத்திரம் நிறுவனம் பின்பற்றியிருந்தது.

### 4.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற ஆய்வுகூடம் மற்றும் அவ் ஆய்வுகூடத்தில் காணப்படுகின்ற ரூபா 657,750 பெறுமதியான உபகரணம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்படுகின்றன.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

ஆய்வுகூடத்தில் நிறுவப்பட வேண்டிய உபகரணம் அலுவலகப் பகுதியில் நிறுவப்பட்டிருந்தது. ஆகையினால், அவ் உபகரணங்களினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனைகளினுடைய தரம் சர்ச்சைக்குரியதாகக் காணப்படுகின்றதுடன் நிறுவனத்தினுடைய நன்மதிப்புக்கு ஒரு பாதகமான தாக்கத்தினைக் கொண்டுள்ளதுடன் அது தவிர்க்கமுடியாததாகவும் காணப்பட்டது.

4.4 முறையாக சுவீகரிக்கப்படாத காணிகள் / ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

2016 திசெம்பர் 31 வரை இலக்கம் 97, ஜாவத்த வீதியில் அமையப்பெற்ற நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களினுடைய உரிமைத்துவத்தினை முறையான விதத்தில் நிறுவனத்திற்கு அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் மற்றும் 2016 திசெம்பர் 31 வரை அந்த காணியின் அபிவிருத்தி செலவினமாக செலவிடப்பட்ட ரூபா 5,644,437 தொகையான பணம் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

4.5 பதவியணியினர் நிர்வாகம்

2016 திசெம்பர் 31 வரை நிறுவனத்தில் 14 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் ஒரு பதவி முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) ஆகக் காணப்பட்டது. ஆகையினால், நிறுவனத்தினுடைய நோக்கங்களினை அடைந்து கொள்வதற்கு சூழல் மதிப்பீடுகள், மருத்துவ சோதனைகளினை மேற்கொள்வதற்கு அறிவு மற்றும் அனுபவத்தினைக் கொண்ட உத்தியோகத்தர்கள் நிறுவனத்தில் காணப்படாததுடன் 2016 திசெம்பர் 31 வரை அவ்வாறான 03 வெற்றிடங்கள் காணப்பட்டன.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 கணக்காய்வுக் குழுக்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் உப பகுதியின் 7.4.1 உறுப்புறைக்கமைய கணக்காய்வுக் குழு 03 மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் ஒரு கணக்காய்வுக்குழு மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

5.2 பெறுகைகள் திட்டம்

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டியின் 4.2.1(அ), (ஆ) இன் பிரகாரம் உடன் 03 வருடங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட பெறுகைகள் செயற்பாடுகளினை உள்ளடக்கிய பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 ஆண்டறிக்கைகளினை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகள் 2017 யூன் 30 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | சரிப்படுத்தல்களின் பதிவில், முறையான அனுமதியுடன் நாட்குறிப்பு மூலச்சான்றுகளின் மூலம் பொது நாட்குறிப்பில் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | நிறுவனத்தின் நோக்கங்களினை அடைந்துகொள்வதற்கு தேவையான முக்கியமான வெற்றிடங்களினைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஆண்டு மதிப்பீட்டுச் சபையினை நடாத்துவதற்கு தவறியமை.<br>(ii) நிறுவனத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட கண்காணிப்பு உபகரணங்களின் (Monitaring Equipement) வழங்குகை மற்றும் திரும்பிப் பெருதல் மீதான முறையானதொரு கட்டுப்பாடு காணப்படாமை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | தகவல் தொழில்நுட்பத்தின் பொது கட்டுப்பாடு | நிறுவனத்தில் பாடநெறிகளினைப் பின்பற்றுகின்ற மாணவர்களின் தகவல்களினை உள்ளடக்கிய தரவுக் கட்டமைப்பொன்று நிறுவப்பட்டிராமை. |

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜே
கணக்காய்வாளர் தலைமை